Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11902) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | சித்திரை 23 | 06 –05–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை –77

# சந்திரிகா – ஜே.வி.பி இன்று சந்திப்பு

# முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம்!

## பாராளுமன்று கலைக்கப்படலாம் எனவும் ஆருடம்

(கொழும்பு)

**மக்கள் விடுதலை முன்னணிக்கும் – சனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் இன்று முக்கியமான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும் இச்சந்திப்பின்போது முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாமென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இதன் பிரகாரம் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி இணக்கப்பாட்டிற்கு வர மறுக்கும் நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தர விடலாமென அரசியல் ஆய்வாளர்கள் ஆருடம் தெரிவித்துள்ளனர்.**

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும், மின்சாரம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றைத் தனியார் மயமாக்கல் தொடர்பாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும்,ஜே.வி.பிக்கும் இடையில் காணப்படும் முரண்பாடானது இன்று கூர்மைபெற்றுள்ள நிலையில் இச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியினருக்கு விளக்கம் அளிப்பதற்காக இன்று அக்கட்சியின் உறுப்பினர்களை சனாதிபதி சந்திக்கவுள்ளார். சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம் மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சிறைச்சாலையில் விடுதலைப்புலிகள் உண்ணாவிரதம்!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஐவர் நேற்று உண்ணாவிரதப் போராட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர். சிறைச்சாலை கூரைக்குமேல் ஏறி அமர்ந்து இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இவர்கள், மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு ஆளுநரின் வரவை எதிர்த்து யாழ்.இல் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.பொது நூலகத்திற்கு வருகை தந்த வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோவினை எதிர்த்து நேற்று பொது மக்களால் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ். பொது நூலகத்திற்கு வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ வருகை தரவிருந்ததை முன்னிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நூலகத்தின் முன் பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மக்கள் என ஆயிரக் கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தையடுத்து ஆளுநர் நூலகத்தின் பின்பக்கப் பாதையால் நூலகத்திற்கு வருகை

(IV ஆம் பக்கம் பார்க்க)







## பொதுக்கட்டமைப்புக் குறித்து சந்திரிகா – மகிந்த பேச்சு

உத்தேச பொதுக்கட்டமைப்புக் குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களை கட்டியெழுப்ப அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் ஒன்றிணைந்து பணியாற்றக்கூடிய வகையில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மி.சபை தனியார் மயமாக்கப்பட மாட்டாது சனாதிபதி தொ.சங்கத்தினருக்கு உறுதி

மின்சாரசபை தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், சனாதிபதி சந்திரிகாவிற்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

மின்சாரசபை மறுசீரமைப்பை எதிர்த்து நேற்று ஊழியர் கூட்டப்படி வேலை ஆரம்பித்ததையடுத்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பின் போது மின்சார சபை மறுசீரமைப்பிற்கு தொழிற்சங்கப்பிரதிநிதிகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதற்கு சனாதிபதி மின்சாரசபை தனியார் மயமாக்கப்பட மாட்டாதென உறுதியளித்ததோடு இதுவரைகாலமும் திறை

(IV ஆம் பக்கம் பார்க்க)

-மட்டு கொம்மாந்துறையில்-

## துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் கண்டெடுப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாந்துறை 10 ஆம் கட்டையடியில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இளைஞர் இருவரின் சடலத்தை பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

நேற்று இரவு 9-30 மணியளவில் கண்டெடுக்கப்பட்ட சடலம் செங்கலடி வைத்தியசாலையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யோசனையைப் பரிசீலிக்க காலஅவகாசம் போதாததால் அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறினோம்

### -ஜே.வி.பியின் அமைச்சர் தெரிவிப்பு

அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்கும் யோசனைகள் குறித்து தீர்மானம் எடுப்பதற்கு இரண்டுமணி நேர அவகாசமே வழங்கப்பட்டிருந்ததாகவும்

இதன் காரணமாகவே தாம் அமைச்சரவைக் கூட்டத்தைப் பகிஷ்கரித்து அங்கிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டதாகவும், ஜே.வி.பி. யின் அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரசபை மறுசீரமைப்புச்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் எழுச்சியுடன் நடைபெற்ற ஜெயந்தன் படையணியின் 12ஆம் ஆண்டு நிறைவு!

### தளபதிகள், போராளிகள், மக்கள் எனப் பலர் பங்கேற்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மரபுவழித் தாக்குதல் படையணிகளில் ஒன்றான ஜெயந்தன் படையணியின் பன்னிரெண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் மட்டக்களப்பில் மிகுந்த எழுச்சியுடன் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு தரவைப் பகுதியில் அமைந்துள்ள ஜெயந்தன் படையணியின் பிரதான தளத்தில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

காலை நிகழ்வுகள் விளையாட்டுப் போட்டிகளுடன் ஆரம்பமாகின. நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியினை மட்டக்களப்பு அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு அவர்கள் ஏற்றிவைத்தார்.

ஜெயந்தன் படையணியின் கொடியினை அதன் சிறப்புத் தளபதி ஜெயார்த்தன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

(IV ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்- சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC(H.B), (சி.11779)

### விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதியில் 7ஆம் வட்டாரம் சிவநகரில் அமைந்துள்ள தென்னை பிரயோசனங்கள் உடைய குடியிருப்புக் காணியில் 1/4 ஏக்கர்காணி விற்பனைக்குள்ளது. எடுக்க விரும்புவோர். காணியை நேரில் பார்த்து விலையைப் பேசிக்கொள்ளலாம். தொடர்புகொள்ளும் முகவரி. செ.அருளானந்தம், ராஜ்அழககம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (5844)

### வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

இடம் 79, 8ஆம் வாய்க்கால் உருத்திரபுரம இரண்டறை, கிச்சின் கிணற்றுடன் வீடு ஒன்றரை ஏக்கர் வருமானமுள்ள காணி, வயல் காணி இரண்டு ஏக்கர் இரண்டு போகம் செய்யலாம் தனி உறுதியுள்ளது விலை நேரடியாக பேசித்தீர்க்கலாம். தொடர்பு எஸ். சிறிகாந்தன் ,210 ஜெயந்திநகர் கிளிநொச்சி. (5848)

### தவறிவிட்டது

தாவடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சத்தியநாதன் ஆகிய எனது அடையாள அட்டை,பயண அனுமதி அட்டை, வெளிநாட்டு ஆவணங்கள் என்பன01.05.2005இல் பரந்தனுக்கும், புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (6105)

### 2007 A/L கணித. விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### காணி விற்பனைக்குண்டு

இ-1542, நரசிங்கன் கோயிலடி, இரத்தினபுரம், கிளிநொச்சி. உரிமையாளர்-வீ.இராசம்மா. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (6098)

## ஓராண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
மேரிலூர்த்து தவமணி
அம்பலவாணர்

பிறப்பு:- 1934 - 02 - 20
இறப்பு:- 2004 - 04 - 17

திதி:- 2005 - 05 - 06

*"அன்பின் திருவுருவாம் எங்கள் அம்மா*
*அணையாத தீபமாம் எங்கள் அம்மா*
*தந்தையை இழந்த எம்மை*
*தளராது பேணிக்காத்தீர்கள்*
*ஓராண்டு சென்றாலும் -எங்கள் அம்மாவின்*
*ஒளி முகம் எம்மைவிட்டு அகலாது".*

**என்றும் உங்களின் நினைவுடன்**

**மகன்மார்கள்,**
**மகள்மார்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

புதுக்குடியிருப்பு
(5850)

## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில, தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல் 15 ஆம்திகதிவரை
**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

**சிறப்பு விலைக்கழிவு**

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11857)

## மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டி

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையும், வலயக்கல்விப் பணிமனையும் இணைந்து நடாத்தும் பாடசாலை மாணவருக்கான மாபெரும் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள் 13ஆம்திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை ஊடாக வலயக்கல்விப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் இப்போட்டிக்கான ஓடுபாதைகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றார் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்.



### கலியுக வரதனாம் திருநகர் (4 ஆம் யூனிற்) சுப்பிரமணியர் தேவஸ்தானத்தில்

## நவக்கிரக சாந்தி விழா

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரை மாதம்25 ஆம் நாள் (08.05.2005) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு மேற்குறித்த தேவஸ்தானத்தில் விநாயக வழிபாடும் ருத்திராபிஷேகமும், மூலமூர்த்திக்கு விசேட தீபாராதனையும், பூசைகளும், நவக்கிரக தேவர்களுக்கு விஷேட ஓமம் அபிஷேகம்,பூசை செய்வதற்கு முருகன் திருவருள் கூடியிருப்பதால் சகல மக்களும், மாங்கல்ய தோசமுடையவர்களும், நோய்த்துன்பத்தால் பாதிப்புடையவர்களும், புத்திரதோஷமுடையவர்களும்,நாகதோசம், செவ்வாய்தோசம், குருதோசம், சனிதோசம் இருப்பவர்களும் பார்த்தீப வருட தோசமான கார்த்திகை 2,3,4, ஆம் கால், ரோகிணி,மிருகசீரிடம்,சித்திரை,சுவாதி விசாகம் 1,2,3 ஆம் கால்,அவிட்டம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தவறாது சாந்தியில் கலந்துகொள்ளவும். எல்லா நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் கலந்துகொள்ளலாம்.

### குருமார் விபரம்

சிவாகம துரந்தரர் சிவஸ்ரீ சிவகந்ததாசக்குருக்கள்(திருநகர் முருகன்ஆலயம்),ஜோதிட மணி சிவஸ்ரீ கணேசபூரணக் குருக்கள் (மல்லாவி முருகன்ஆலயம்),சிவஸ்ரீ. ஞானப்பிரகாசக் குருக்கள் (மல்லாவி சிவன் ஆலயம்), சிவஸ்ரீ. வீரசிங்கக்குருக்கள் (சாளம்பன் விநாயகர் ஆலயம்), ஆலய குரு பிரம்மஸ்ரீ.க.கஜேந்திரசர்மா (திருநகர் முருகன் ஆலயம்)
உதவியாளர்:- சண்முகதாஸ்,சிவநாதன்.

குறிப்பு:- 4 நாட்களுக்கு முன் ஆலய குருவிடம் தொடர்பு கொள்க. அடியார்கள் பூமாலை, பால், இளநீர், நெய், சமித்துவகை,அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு வரவும். இதனால் மக்களுக்கு விவசாயம், பசுவிருத்தி,தனதானியம், செல்வம் செழித்துவரும்.

மங்கள வாத்தியம் நிமலன் குழுவினர். ஒளி,ஒலி அமைப்பு யோ.குகபாலன்

மக்கள் நலன் கருதும்
திருநகர் முருகன் ஆலய பரிபாலன சபையினர். (சி.11831)

## தகவல் தொழில்நுட்ப நிறுவனம்–தமிழீழம் (ITO-T)

புதுக்குடியிருப்பு–முல்லை

## பணிநிலை வேண்டுகை

☆ கணினி மென்பொருள் தயாரிப்பு அபிவிருத்திப் பகுதி (Software production and devolopment unit)
☆ கணினி வலையமைப்புப் பகுதி (Computer communication and networking unit)
☆ இலத்திரனியல் பகுதி (Electronics unit)

ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டமைந்து தமிழீழத்தின் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டினை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்ற மேற்படி நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

## இலத்திரனியல் தொழில்நுட்ப உதவியாளர் (பயிலுனர்)

### தகைமைகள்:

☆ க.பொ.த.உயர்தரத்தில் சித்தி அல்லது
☆ க.பொ.த.சாதரண தரத்தில் கணிதம் அல்லது விஞ்ஞானம் என்பவற்றில் சித்தி உட்பட ஏனைய பாடங்களில் சித்தி.
☆ ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தின்போது பயிற்சிக்காலக் கொடுப்பனவாக ரூபா ஐந்து ஆயிரம் வழங்கப்படும். நெடுந்தூரத்தில்இருந்து வருவோர்க்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 20.05.2005 திகதிக்கு முன்பாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நேர்முகத்தேர்வு பற்றிய விபரங்கள் கடிதமூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

**விண்ணப்பங்கள்அனுப்பவேண்டிய முகவரி**

**தகவல் தொழில்நுட்ப நிறுவனம் — தமிழீழம்,**
**சுயம்பு ஆதிபராசத்தி ஆலயவீதி,**
**4ஆம் வட்டாரம்,**
**கோம்பாவில்,**
**புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு**

இணையத்தளமுகவரி :- www.ito-net.org
மின் அஞ்சல் முகவரி :- ito@ito-net.org

(6100)

# வீடுகளுக்கு முழுமையான நட்டஈடு வழங்குமாறு மட்டு.அமிர்தகழிமக்கள் ஆர்ப்பாட்டம்

ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வீடுகளுக்குரிய நட்டஈட்டுக் கொடுப்பனவை முழுமையாக வழங்கக்கோரி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு அமிர்தகழி கிராம மக்கள் பிரதேச செயலகம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக பிற்பகல் வரை செயலகம் இயங்கவில்லை.

சுனாமியால் சேதமடைந்த தமது வீடுகள் தொடர்பாக முன்னர் மேற் கொள்ளப்பட்ட சேத மதிப்பீடுகள் திருப்திகரமானதாக இல்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தங்களுக்கு நட்டஈடு முழுமை யாக வழங்கப்பட வேண்டும் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டு நட்டஈட்டு; மதிப்பீடு மீண்டும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்றும் இவர்களினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டச் செய லாளர் வேல்முருகு சண்முகத் திற்கும் குறிப்பிட்ட கிராம பிரதி நிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்திப்பு நடை பெற்றது.இச்சந்திப்பில் நட்டஈட்டுக் கொடுப்பனவு மீளாய்வு செய் யப்படும். மீண்டும் இழப்பீடுகள் மதிப்பீடு செய்யப்படுமென மாவட்ட செயலாளர் அளித்த உறுதி மொழியையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

## ஓராண்டு நினைவு நாள்



மேஜர்
பகலவன் (கிச்சா)
சிவானந்தன்
ஸ்ரீமுரளி

மண்ணின் முத்தாக
31.12.1973

மண்ணின் வித்தாக
06.05.2004

சம்பவம் :- மட்டு தன்னா முனையில் தேச விரோதிகளின் வஞ்சகத்தால் இவருடன் வீரச்சாவு அடைந்த கப்டன் நிதர்சன் அவர்களையும் நினைவு கூருகின்றோம்.

பாசமுள்ள அண்ணன் அன்பு வடிவே
எங்கள் கிச்சா
ஏங்கித் தவிக்கின்றோம் எம்மைப்
பிரிந்து எங்கு சென்றாய்
ஓராண்டு அகன்றாலும்
அகலாது உந்தன் நினைவு
உன் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப்
பிராத்திக்கின்றோம்

உன் பிரிவால் துயருறும், உடன்பிறவா (சகோதரன்)
ம.காந்தி குடும்பத்தினர்
(வீரபாண்டியன் பல்பொருள் வாணிபம்
திருமுறிகண்டி)

(6107)

## சட்டவிரோத மண்அகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி மந்துவில் பகுதியில் சட்டவிரோத மண் அகழும் நடவடிக்கைகள் தொடர்ந் தும் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# வெலிக்கண்டல் வெளியில் வேளாண்மைக்கு அனுமதியில்லை

### -நீர்ப்பாசனப் பொறியியலாளர் அறிவிப்பு

கடந்த திங்கட்கிழமை வெளியான பத்திரிகையில் "வீணாக வெளி யேறும் நீரைப்பயன்படுத்தி வெலிக்கண்டல் வெளியில் நெற்செய்கைக்கு அனுமதி" என்ற தலைப்பில் அமைந்த செய்தியில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளைப் பிரதேசச்செயலர் பிரிவிலுள்ள வெலிக் கண்டல் வெளியில் விவசாயிகள் கட்டுப்பாடாக நெற்செய்கையை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டிருந்தது தவறானதாகும். என நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் எமக்கு எழுதியுள்ள கடிதத்தில் வெலிக்கண்டல் வெளியூடாக இரணைமடுத்திட்டத்தின் வலதுகரை, இடதுகரை ஒரு பகுதியின் கழிவுநீரை மறித்து வேளாண்மை செய்து வருவதினால் சில தடங்கல்கள் ஏற்பட்டதையிட்டு இதில் வேளாண்மை செய்வது தடைசெய்யப்பட்டது. கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில்; சென்ற மழையினால் சேர்ந்த மேலதிக நீரில் இடதுகரை வாய்க்கால்களில் அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் உபஉணவு செய்வதெனவும் வெலிக்கண்டல் வெளியில் எதுவித வேளாண்மையும் அனுமதிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முல்லை மாவட்ட கட்டட நிர்மாணிகளிற்கான (மேசன்)

## கலந்துரையாடல்

இடம் :- புதுக்குடியிருப்பு சிறி சுப்பிர மணியம்மகாவித்தியாலயம்
திகதி :- 08.05.2005 (ஞாயிறு)
நேரம் :- காலை 9.00 மணி

முல்லை மாவட்ட கட்டட நிர்மாணிகள் அனைவரும தவறாது கலந்து கொள்ளவும்

**கட்டட நிர்மாணிகள் சங்கம்,**
**முல்லை மாவட்டம்.**

(6108)

## இலங்கை செஞ்சிலுவை சங்கம் கிளிநொச்சி கிளையினால் நடாத்தப்படும்

## மே -08 உலக செஞ்சிலுவை தினம்

காலம் :- 2005 மே 08 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி
இடம் :- பண்பாட்டு மண்டபம்,கிளிநொச்சி
தலைவர் :- திரு.இ.கார்த்திகேசு அவர்கள் (நிறுவனத் தலைவர்)

பிரதம விருந்தினர்

**உயர் திரு தி.இராசநாயகம் அவர்கள்**

அரசாங்க அதிபர்,கிளிநொச்சி மாவட்டம்.

சகல ஆயுட்கால, உதவும் தொழிற்படும்,மாஎ அங்கத்தவர்களையும், தொண்டர்களையும், நலன்விரும்பிகளையும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு.

அன்புடன் அழைக்கின்றோம்.

**க.கனேஸ்,**
**கௌரவ செயலாளர்.**

**இ.கார்த்திகேசு**
**கௌரவ தலைவர்.**

மற்றும் பணிப்பாளர்கள்,பணியாளர்கள்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம்,கிளிநொச்சி கிளை,கண்ணன் கோவில் வீதி,கிளிநொச்சி.
021-2285843

(சி.11866)

## மே - 08 உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு

### இலங்கை செஞ்சிலுவை சங்கம் கிளிநொச்சி கிளையினால் நடாத்தப்படும்

## சைக்கிள்,வீதி ஓட்டப்போட்டிகள்

ஆண்களுக்கான வீதி ஓட்டப் போட்டி 07.05.2005 சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு கொக்காவில் சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய மைதானம் முன்பாக நிறைவுபெறும். பெண்களுக்கான வீதி ஓட்டப்போட்டி 07.05.2005 சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு 154 ஆம் மைல்கல் சிவபாத கலையகம் பாடசாலை முன்பாக ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய மைதானம் முன்பாக நிறைவுபெறும்.

ஆண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டி 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை. 7.00 மணிக்கு பளை சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி பண்பாட்டு மண்டம் முன்பாக நிறைவுபெறும். பெண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டி 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை. 7.00 மணிக்கு இயக்கச்சி சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் முன்பாக நிறைவுபெறும்.

1.போட்டிகள் யாவும் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.
2.போட்டிகளில் பங்குபற்றுவோர் போட்டி ஆரம்ப இடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
3.கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்டவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்குபற்றலாம்.
4.பதிவுக்கட்டணம் இல்லை.

**க.கணேஸ்,**
**கௌரவ செயலாளர்.**

**இ.கார்த்திகேசு,**
**கௌரவ தலைவர்.**

இலங்கை செஞ்சிலுவை சங்கம்,கிளிநொச்சி கிளை,கண்ணன் கோவில் வீதி,கிளிநொச்சி. 021-2285843

(சி.11867)

## 15 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 * 01 * 1928



உதிர்வு 22 * 04 * 2005

## அமரர் உயர்திரு. டாக்டர் பரமு.கிருஷ்ணபிள்ளை

அன்பின் உறைவிடமே எமதருமை ஐயா,
நீங்கள் எம்மைவிட்டு இப்பூவுலகில் இருந்து.
விண்ணுலகம் சென்று நாட்கள் பதினைந்து
ஓடிமறைந்திடிலும்
அழியாத புன்னகையுடன் அன்பாக
நோயாளிகளைப்பார்த்து நோய் தீர்க்கும்
அந்தப் பூமுகம் தான் எம்மைவிட்டு அகன்றிடுமா
எம் அனைவர் உள்ளங்களிலும் அணையாத தீபமாய்
விளங்கிடும் நீங்கள் விண்ணக வாழ்விலும் விடியலாய்
பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனைப்
பிராத்திக்கின்றோம்

ஐயா அவர்களுக்கு அவரின் மறைவால் துயருறும் மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு, மற்றும் கிராமிய வைத்திய சாலை புதுக்குடியிருப்பு வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் கண்ணீர் அஞ்சலி.

வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
மாவட்ட வைத்தியாசாலை முல்லைத்தீவு
கிராமிய வைத்தியசாலை புதுக்குடியிருப்பு

(சி.11865)





மட்டக்களப்பில் ஜெயந்தன் படையணியின் 12 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வின்போது

# இராணுவத்தின் அடாவடியாலும், அரசின் போக்காலும்

# சமாதானச் சூழலில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

## -இனியவன்-ஹொக்லண்டிடம் தெரிவிப்பு

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித் தனங்களாலும் அரசாங்கத்தின் போக்காலும் சமாதானச் சூழலில் நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டனர் என இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹெக்றப் ஹொக்லண்ட் அவர்களிடம் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.இனியவன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மன்னார் மாவட்டச்செயலகத்தில் கண்காணிப்புக் குழுத்தலைவருடனான விசேட சந்திப்பிலேயே இனியவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெக்றப்ஹொக்லண்ட் மற்றும் அவரது திட்ட ஆலோசகர் ஸ்ரூ பேக்ஸ்ரோன், உதவியாளர் மாஸ் லண்ட்ரேப்ரோன் மற்றும் மன்னார் மாவட்டக் கண்காணிப்புக்குழுத் தலைவர் பின்பினேனட்ஸ்ரட், சட்ட ஆலோசகர் மக்னஸ் தோர்ட்லட் ஆகியோரும், தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் அவர்களும் மன்னார் நகரப்பொறுப்பாளர் கா.முடியரசன் அவர்களும், மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் செல்வி நிலவரசி அவர்களும், நானாட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தற்போதைய சமாதானச் சூழலில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டது பற்றியும், மக்களிடத்தில் இராணுவம், பொலிஸ் அதிக போர்ச்சூழலுக்கான நெருக்கடியை ஏற்படுத்தி வருவது, மக்களின் உணர்வு கலந்த எழுச்சி நாட்களை நடாத்தும்போது படையினர் முட்டுக்கட்டையாகவும் அதனை முடக்கவும் அதிக படையைக் குவித்து மக்களைப் பீதிக்குட்படுத்துவது, சமாதானச் சூழலில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விதிமுறைக்கு அமையப்படையினர் மக்களின் குடியிருப்புக்களில் இருந்து விலகாமையும் இடங்களை மீள ஒப்படைக்காமையும், மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் இராணுவம் நிலைகொண்டுள்ளமையும், பொது இடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகளுக்கு அருகில் மக்களுக்கு இடைஞ்சலாகப் படையினர் நிலைகொண்டிருப்பது, அரச படைகள் சட்டவிரோதமான பல செயல்களுக்குத்துணை போவதும் பற்றி மன்னார் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எஸ்.இனியவன் அவர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் சுட்டிக்காட்டினார். இச் சந்திப்பின் போது இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் கூறுகையில் தொடர்ந்து இது பற்றிய கலந்துரையாடல்கள் ஏற்படுத்தப்படும் என்றும் சமாதானச் சூழல் பற்றி மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் செயற்பாடுகளை மீள வலியுற்றுப் போவதாகவும் கூறியுள்ளார்.

# மேஜர் குலத்தின் வித்துடலுக்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி

மேஜர் குலத்தின் வித்துடல் நேற்று முள்ளியவளைப் மாவீரர்துயிலுமில்லத்தில் பூரண இராணுவமரியாதையுடன் புனிதவிதைகுழியில் விதைகக்கப்பட்டது.

கடந்த 15.09.1991ஆம் திகதி மணலாற்றுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மின்னல் நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்திருந்து கடந்த மூன்றாம் திகதி அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் குலம் எனும் மாவீரரின் வித்துடல் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனியாக எடுத்துவரப்பட்டு தண்ணீரூற்று இந்துதமிழ் வித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு இம்மாவீரரின் நினைவுச் சுடரினை தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் ஏற்றிவைக்க அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது. இந் நிகழ்வில் தண்ணீரூற்று இந்துத்தமிழ் வித்தியாலய ஆசிரியை, மற்றும் அப்பகுதி வர்த்தகசங்கச் செயலாளர்கள் ஆகியோர் உரைநிகழ்த்த இம் மாவீரரின் போரியல் சாதனைகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் உரையின் மூலம் எடுத்துக்கூற தொடர்ந்து தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் இம் மாவீரரின் போராட்ட வரலாற்றையும் அவரது சாதனைகளையும்விளக்கி உரையாற்றினார். தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் இம் மாவீரரின் வித்துடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து வித்துடல் மாலை 5.30 மணியளவில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. (ச)

# கண்டி வீதி – பழைய பூங்கா வீதி சந்தியில் நான்கு வர்த்தக நிலையங்கள் எரிந்து சாம்பலாயின

## – தீயணைப்புவண்டி இருந்தும் பலனில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு அருகாமையிலுள்ள பழைய பூங்கா வீதி கண்டி வீதி சந்தியிலுள்ள நான்கு வர்த்தக நிலையங்கள் நேற்றுமாலை 07.00 மணியளவில் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இவ்விபத்தில் சுமார் 35 லட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டதாக தெரியவருகிறது. இதில் பலசரக்கு கடை, சலவைக்கடை, மிக்சர் கடை, துவிச்சககரவண்டி திருத்தும் கடை ஆகியவையே எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் நீர் நிரப்பாத வண்டி வந்து திரும்பிப் போய் நீர் நிரப்பிக் கொண்டு வந்த போது வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து விட்டன. இதேவேளை அப்பகுதியிலுள்ள பொது மக்கள் பலத்த முயற்சி எடுத்த போதிலும் தீயினை அணைக்க முடியாமல் பேனதும் குறிப்பிடத்தக்கது. (41)

### சந்திரிகா...

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்படிக்கையில் குறித்து இறுதி முடிவிற்கு வர சனாதிபதி உத்தேசித்துள்ளார். அதனால் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் மக்கள் விடுதலை முன்னணியினரை அழைத்து பொதுக்கட்டமைப்புக் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்து அதற்கு அவர்களின் அனுமதியையும் பெறும் நோக்கிலேயே சனாதிபதி அவர்களைச் சந்திக்க உத்தேசித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுக்கட்டமைப்பை நிறுவுவதில் இருக்கும் சிக்கல்கள் குறித்து நேற்று முன்தினம் முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்து சனாதிபதி கலந்துரையாடியுள்ளார். முஸ்லிம் சமாதானப் பேரவையின் தலைவர் ஜாவிட் யூ சுப், அமைச்சர் பேரியல் அஷ்ரப், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

### மட்டக்களப்பில் எழுச்சி...

தொடந்து ஜெயந்தன் படையணியின் அணிவகுப்பு இடம் பெற்றது. இவ் அணிவகுப்பினை கேணல் பானு அவர்கள், மட்டக்களப்பு அம்பாறை தளபதி ராம், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி ஜெயந்தன் படையணியின் சிறப்புத் தளபதி ஜெயார்த்தன் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

மாலை நிகழ்வுகளில் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரினை படைத்துறைப் பயிற்சி ஆசிரியர் மனோ மாஸ்ரர் ஏற்றிவைத்தார். ஜெயந்தன் படையணியிலிருந்து வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படம் தாங்கிய நினைவு மண்டபத்தினை கேணல் பானு அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர். தயாமோகன் தலைமையில் இடம் பெற்றது. ஜெயந்தன் படையணியின் வெளியீடான வெல்லும் வரை செல்வோம்.ஒலிப் பேழையினை நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் வெளியிட கேணல் பானு அவர்கள் ஒலிப் பேழையினைப் பெற்றுக் கொண்டார். அரங்கில் கருத்துரைகளை கேணல் பானு அவர்கள், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கருத்துரைகளைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளன் திருக்குமரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்ரர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டக்களப்பு அம்பாறை தேசியத் துணைப்படைத் தளபதி நாகேஸ், மாவடி முன்மாரி கோட்டத் தளபதி ரமணன், ஜெயந்தன் படையணியின் மாவீரர் போராளிகளின் பெற்றோர், போராளிகள், பொறுப்பாளர்கள், மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர் இந்நிகழ்வின் கலைநிகழ்ச்சிகள் நள்ளிரவு வரை நடைபெற்றன.

### வடக்கு...

தந்தார். இதையடுத்து திரண்டிருந்த மக்கள் மேலும் ஆவேசம் அடைந்து சுனாமி நிவாரணத்தில் புறக்கணிப்புச் செய்து விட்டு இங்கு ஏன் வந்தாய், இது எமது நூலகம் கள்ளப்பாதையால் வந்தவனே உடனடியாகத் திரும்பிச் செல் என்றும் பலவாறு கோசமெழுப்பினர். மக்களின் இவ் ஆர்ப்பாட்டத்தையடுத்து நூலக வளாகம் மற்றும் அதை அண்டிய பகுதிகளிலும் கலகமடக்கும் பொலிசாரும், இராணுவத்தினருமாக பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (சு)

### யோசனையை...

சட்டமூலம் தொடர்பாக விளக்குவதற்காக கொழும்பில் நேற்று நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களான அநுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத், லால்காந்த, சந்திரசேன விஜேசிங்க ஆகியோர் இந்த ஊடக மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான தமது யோசனைகளை சனாதிபதி சந்திரிகா வழங்கியிருந்ததாகவும்,

அதனைப் பரிசீலித்து முடிவுகூறுவதற்கு இரண்டுமணிநேர அவகாசம் மட்டுமே அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார். நாட்டின் முக்கிய பிரச்சினை ஒன்று தொடர்பாக இரண்டுமணிநேரத்தில் தீர்மானிக்கும் புத்திக்கூர்மை எந்த அமைச்சருக்காவது இருக்கிறதா என்று தமக்குச் சந்தேகம் தோற்றியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் அவர், அதன் காரணமாகவே அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறுவது என்று தாம் தீர்மானித்ததாகக் கூறினார்

### மட்டக்களப்பு...

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை வந்து சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை சிறைச்சாலை நிர்வாகத்திடம் முன்வைத்துள்ளனர். கடந்த ஆண்டு யூன் மாதம் எட்டாம்திகதியில் கைதான கிருஸ்ண பிள்ளை ரமேஸ்குமார் (சூரியவேந்தன்) மற்றும் கணேசன் சுதர்சன், 27.10. 2004 இல் கைது செய்யப்பட்ட முத்துலிங்கம் உதயகுமார், 11.08.2004 இல் கைது செய்யப்பட்ட கந்தசாமி கீதன் (கரன்), 30.11.2004 இல் கைது செய்யப்பட்ட ஜெரிஸ்டன் சரசகாந்தன் (பெரியதம்பி). ஆகிய போராளிகளே உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபட்டுள்ளனர். இவர்கள் கடந்த ஆறு மாதங்களிலிருந்து ஒரு வருடம்வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இந்தப் போரார்ட்டம் குறித்து சிறைச்சாலை நிர்வாகம் தற்போது கொழும்பில் தங்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது. இவர்களுக்கு அதரவு தெரிவிக்கும் வகையில் சிறைச்சாலையிலுள்ள ஏனைய விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்கள் என மேலும் நால்வர் நேற்று தமது மதிய உணவைப் புறக்கணித்துள்ளனர்.

### துப்பாக்கிச்..

25 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞர் நேற்று இரவு வரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### மி.சபை...

சேரியின் வசமிருந்த மின்சாரசபையின் பங்குகள் இனிமேல் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது. இது குறித்த பூரணமான விளக்கம் அடுத்தவாரம் கூடவுள்ள அமைச்சரவை உபகுழுவில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

### பொதுக்...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார். பொதுக்கட்டமைப்புக் குறித்து தனக்கு எதுவும் தெரியாதென்றும் தெரியாத ஒன்றைப் பற்றி தான் கருத்துக் கூறமுடியாதென்றும் அண்மையில் பிரதமர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த நிலையிலேயே சனாதிபதி அவருக்கு அது குறித்து விளக்கம் அளித்துள்ளார். அத்துடன் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது குறித்தும் சனாதிபதி பிரதமருடன் உரையாடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பையடுத்து இவ்விரு விடயங்கள் குறித்தும் தான் மிக ஈடுபாட்டுடன் பணியாற்றுவதாக பிரதமர் உறுதியளித்திருப்பதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி வச்சிட்டு வெளியிடப்பட்டது